பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 18 (3—11—72) வெள்ளி வெளியூர்: ஐப்பசி 19 (4—11—72) சனி [இதழ்: 117

ஒழுக்கசீலர் யா...

சென்னை, நவ. 3—

''ஒழுக்கத்தில் என்னை விடச் சிறந்தவர்கள் இல்லை' என்று ஒழுக்கசீலர் எம்.ஜி.ஆர். சொல்கிறார்.

''நான் உலகம் முழுவதும் சுற்றி வந்திருக்கிறேன்; நான் சென்ற நாடுகளில் 200 ஆண்டுகளாகப் பக்குவப்படுத்தப்பட்ட ஒயினை விருந்தில் வைத்தாலும், அதைத் தொடாமல் வெறும் சோடாவை —மழ ரசத்தை மட்டும் குடித்துவிட்டு வந்தவன்; என்ன ஒழுக்கக் கேடாக நடந்திருக்கிறேன்— தைரியமிருந்தால் சொல்லட்டும்.''

—அமைச்சர் நாவலர்

'நாணயஸ்தர்' காட்டிய கணக்கு

சிந்தனைக்குச் சில தகவல்கள்

நல்லவராக நடித்ததால் மற்றவர்களைச் சந்தேகிப்பதா?

ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் குற்றச்சாட்டு — நாவலர் தரும் பதில்

சென்னை, நவ. 3—

'எம்.ஜி ஆர். புத்திசாலித்தனமாகத் தாம் நடித்த படங்களில் எல்லாம் நல்லவனாகவே வேடம் போட்டு நடித்துவிட்டார்; நடிப்பில் நல்லவனாக நடித்தார்; ஒரு படத்திலாவது அவர் வில்லனாக முழுவதும் நடித்ததில்லை; அதனால்தான் தாய்மார்களெல்லாம் ஏமாந்து விட்டார்கள்!

'அவரைப் படத்தில் நல்லவனாகவே மக்கள் பார்த்துவிட்டார்கள்; ஆனால் அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்.

''சினிமாவில் வில்லனாக நடிப்பவர்களெல்லாம் வாழ்க்கையில் வில்லனாகவே இருப்பதில்லை; அதைப்போல் சினிமாவில் நல்லவனாக நடிப்பவர்களும் வாழ்க்கையில் நல்லவர்களாகவே இருந்துவிடுவதில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

''இன்றையத் தினம் அவரது கட்சி, வன்முறையை நம்பியே நடந்துகொண்டிருக்கிறது; 'எங்காவது கலகம் ஏற்படாதா — பிணம் விழாதா — கல்லூரிகள் மூடப்படாதா' என்று! இவற்றை நம்பி அந்தக் கட்சியை வளர்க்க நினைக்கிறார்களே தவிர, கொள்கையின் அடிப்படையில் வளர்க்க நினைக்கவில்லை!

''நவம்பர் 10-ந் தேதி பஸ்கள் ஓடாது — இரயில்கள் ஓடாது — சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடாது — என்கிறார்கள்; நாங்கள், 'ஓடக்கூடாது' என்று சொல்லமாட்டோம்; இருந்தாலும், 'அவை ஓடாது' என்கிறார்!

''வன்முறைகள் மூலம் எதுவும் செய்துவிட முடியும் என்று நினைக்கிறார்கள்; நாடும் — நகரமும் பாதிக்கப்படுமே தவிர, வேறு எதைச் சாதித்துவிட முடியும்?

''இப்படிப்பட்டவர்களை மக்கள் மன்றம் எடை போட்டுச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்; வன்முறைக்குப் பொதுமக்கள் இடம் தராமல் அமைதி காக்க வேண்டும்.

''கட்சித் தகராறுகளுக்கு பஸ்கள் என்ன செய்யும்? அவற்றைக் கொளுத்துகிறார்கள் — 30 பஸ்களைக் கொளுத்தியிருக்கிறார்கள்; இப்படி மக்கள் சொத்துக்கு நட்டம் ஏற்படுத்துகிறவர்களை வைத்துக்கொண்டுதானா அரசியல் நடத்த வேண்டும?''

—என்று கழகப் பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள், நேற்று சென்னை—வசன்னையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வினவினார்.

சென்னை 4-வது வட்டம் (வண்ணை) தி. மு. கழகத்தின் சார்பில் பொதுக்குழு விளக்கப் பொதுக்கூட்டம் தோழர் பி. கே. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் மு. நடராசன், பகுதிச் செயலாளர் பி. ஏ. என். இராசரத்தினம், த. சேதுராசன், வி. எஸ். ஆனந்தன் எம்.சி., கே. எஸ். இலக்குமணன், இரா. மு. மனோகரன் எம்.சி., மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் எம்.எல்.சி., சுருளிவேல் எம்.எல்.சி., செல்வி சற்குணம் எம்.சி. ஆகியோர் பேசினர்.

நாவலர் தமது நீண்ட பேருரையில், ஒட்டுக் காங்கிரசு ஸ்தாபகரின் உள்நோக்கத்தையும்— அவரது கடந்தகால நடவடிக்கைகளையும் விளக்கியதுடன், ஒட்டுக் காங்கிரசு ஸ்தாபகரின் ஒழுக்கமும் — நாணயமும் எப்படிப்பட்டவை என்பதையும் அம்பலப்படுத்தினர்; அவர் பேசியதாவது:—

''அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொத்துக் கணக்குக் காட்ட வேண்டும் என்று சட்டம் கொண்டுவந்து அதன்படி கணக்கு வைத்துக் கொண்டிருப்பது தி. மு. கழக அமைச்சர்கள் — சட்டமன்ற உறுப்பினர்கள் தான்.

இப்படிச் சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சியாக இருந்தபோதே நானும் —மாதவன் அவர்களும் சட்டமன்றத்திலேயே தீர்மானம்கொண்டு வந்து பேசினோம்.

இப்போதுதான் எம்.ஜி.ஆர். கேட்கிறார் — 'சொத்துக் கணக்குக் காட்டவேண்டும்' என்று; 1965ம் ஆண்டிலேயே நாங்கள் அப்படிக் கேட்டோம்; ஆனால் அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம், 'அவனவன்கணக்கை அவனவன் பார்த்தால் போதும்' என்று சொன்னார்.

அதேபோல், நாடாளுமன்றத்தில், 'அமைச்சர்களின் சொத்துக் கணக்குக் காட்டப்பட வேண்டும்' என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது தலைமையமைச்சர் இந்திரா காந்தி, 'இருக்கின்ற எம்.பி.-க்களெல்லாம் கணக்குத் தரவேண்டும் என்று சொல்லி அவர்களைச் சந்தேக நிலைக்குக் கொண்டு செல்வது நல்லதல்ல— நாமே நம்மைச் சந்தேகப்படுவதா?' என்று கேட்டார்.

வலது கம்யூனிஸ்டுகள் இன்று, 'ஆர்ப்பாட்டம் நடத்துவோம்' என்று கூறிக் கொண்டிருக்கிறார்களே — அவர்களது கட்சியைச் சேர்ந்த கேரள முதலமைச்சர் அச்சுத மேனன், இரண்டு நாளைக்கு முன்பு, 'அமைச்சர்கள் தங்கள் கணக்கை என்னிடம் தந்தால் போதும்; அதை வேறு யாரிடமும் தரவேண்டியதில்லை' என்று கூறினர்.

இப்படி, 'கணக்கைக் காட்ட வேண்டும்' என்று கூறுவதற்கு முன்வரும் தைரியம் இந்திரா காந்திக்கும் வரவில்லை — வலது கம்யூனிஸ்டுகளுக்கும் வரவில்லை!

ஆனால் இன்று தமிழகச் சட்டமன்றத்தில்தான் அமைச்சர்களின் — சட்டமன்ற உறுப்பினர்களின் — 234 பேர்களின் கணக்கும் வைக்கப்பட்டிருக்கிறது.

அக்டோபர் 31-ந் தேதி பூனாவில் நடைபெற்ற சிண்டிகேட் கட்சி மாநாட்டில் இராஜாராம் பாண்டே என்பவர், 'பழைய காங்கிரசுத் தலைவர்கள் சொத்துக் கணக்குக் காட்டவேண்டும்' என்று தீர்மானம் கொண்டு வந்தபோது, பலமான எதிர்ப்புகளுக்கிடையே அது தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்தியாவிலேயே தைரியமாகக் கணக்கு வைப்பது கழகம்தான் — கழக அமைச்சர்கள்தான்!

சொத்துக் கணக்கு வைக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்ததும், அதைச் சட்டமாகக் கொண்டுவந்ததும் நாம்தான்; அதன்படி கணக்கு வைப்பதும் நாம்தான்!

சொத்துக் கணக்குகளைக் காட்டுவதற்கான 'பாரம்' சட்டமன்ற உறுப்பினர்கட்கு தரப்படுகிறது; அதிலே, அசையாச் சொத்துக்கள் — வணிகச் சொத்துக்கள் — பங்கு — பங்கிருப்பு — கூட்டு வைத்திருப்பது — வங்கி இருப்பு — சேமிப்பு — சேவிங்ஸ் கணக்கு — கரண்ட் கணக்கு — நகை — அதில் தங்கம் எவ்வளவு — நகரும் சொத்து என்ன — ஈடுபட்ட டிரஸ்டு — இவைகளிலெல்லாம் அடங்காதவை — குடும்பத்தினர் கணக்கு — மனைவி, பிள்ளை, தாய், தந்தை இருந்தால் அவர்களின் கணக்கு என்னென்ன — என்ற விவரங்கள் கேட்கப்படுகின்றன.

இந்தக் கணக்குகள் எல்லோரிடமும் இருக்கின்றன; என்னுடைய கணக்கு மற்ற உறுப்பினர்களிடம் இருக்கிறது. அவர்கள் கணக்கும் என்னிடமிருக்கிறது

அவர்கள் வைத்திருக்கின்ற கணக்குகளில் யாருக்காவது சந்தேகமிருந்தால், நாணயம்—நேர்மை மிக்கவர்கள் அதுபற்றிக் கேட்கலாம்.

அந்தக் கணக்கில் சொத்தோ — சோடை இருந்தால் அதுபற்றிச் சொல்லட்டும்; சட்டமன்றத்திலும் சொல்லட்டும்; இல்லாவிட்டால் நீதிமன்றத்தில் சொல்லட்டும்.

இதிலே எம்.எல்.ஏ.-க்கள்கணக்கு மட்டுமல்ல — எம்.எல்.சி.-க்கள் கணக்கும் இருக்கிறது; மாவட்டச் செயலாளர்களான நீலநாராயணன், கோவை இராசமாணிக்கம், மேயர் முத்து, தென்னரசு போன்றவர்களின்கணக்குகளும் இருக்கின்றன,

முதலில் எங்கள் கணக்குகளில் தவறுகள் இருந்தால் சொல்லட்டும்; பிறகு வட்டச் செயலாளர்கள் — பகுதிச் செயலாளர்கள் கணக்குக்குச் செல்வோம்!

'உலகத்திலேயே ஏசுவுக்குப் பிறகு நான்தான்; புத்தருக்குப் பிறகு — நபிகள் நாயகத்திற்குப் பிறகு நான்தான்' என்ற முறையில் சொல்லிக்கொள்ளும் எம். ஜி. ஆர். 13 முறை நோட்டீசு அனுப்பியும் 1970, 1971, 1972-ம் ஆண்டுக்கான கணக்கை வைக்கவில்லை — பதிலும் வரவில்லை.

வீடு இருக்கிறதா' என்றால், 'ராமாவரம் தோட்டத்தில்' என்று சொல்கிறார்; அதில், எனக்கும் — எம். ஜி. சக்கரபாணிக்கும் பாதிப் பாதி பங்கு' என்கிறார்! வீடுகள் எவ்வளவு — எப்போது கட்டப்பட்டன என்ற விவரங்கள் ஏதுமில்லை!

தி[illegible]' என்று கேட்டால் ராமா[illegible] என்று குறித்திருக்கிறார் தவிர, 'எவ்வளவு' நிலம் என்ற விவரம் ஏதும் இல்லை'

'வேறு இடங்களில் என்னென்ன சொத்துக்கள்' என்று கேட்டால் சாலிக்கிராமத்தில் தோட்டம்; ஆலந்தூரில் மார்க்கெட்; அவைகளிலும் பாதி எனக்கு—பாதி எம். ஜி. சக்கரபாணிக்கு' என்கிறார்!

கேரளத்தில் வடவூரில் வீடு' என்கிறார்; எப்போது கட்டியது—விலை என்ன? என்பது பற்றிய விவரங்கள் இல்லை.

'லாயிட்ஸ் ரோடு வீடு; அதில் எனக்குப் பாதி — எம். ஜி. சக்கரபாணிக்குப் பாதி' என்கிறார்!

'மதுரையில் நிலம் இருக்கிறது' என்கிறார்! வைகையிலா—மதுரையிலா — எங்கே இருக்கிறது என்கின்ற குறிப்பு இல்லை.

வருமான வரிக் கணக்கை ஏமாற்ற மற்றவர்களெல்லாம், அண்ணன்—தம்பி பெயரில் எழுதுவதாகக் கூறுகின்ற எம். ஜி. ஆர். செய்திருப்பது என்ன?

'பாதிச் சொத்து எனக்கு—பாதிச் சொத்து எம். ஜி. சக்ரபாணிக்கு' என்று எழுதியிருக்கிறாரே — மற்றவர்களைப் பற்றிச் சொல்பவர் நாணயமானவராக நடந்து கொண்டிருக்கிறாரா?

கலைஞர் கருணாநிதிக்கு வீடு இருக்கிறது என்றால், முகவரியோடு அதனை எழுதிக் காட்டியிருக்கிறார்; 1955-ல் வாங்கியதாகவும், எவ்வளவுக்கு வாங்கியது என்பதையும் கூறுகிறார்; அதேபோல, திருவாரூரில் இத்தனை ஏக்கர் நஞ்சை — இத்தனை ஏக்கர் புஞ்சை என்று குறிப்பிடுகிறார்.

நானும் அதேபோல் விவரமாக என் கணக்கை வைத்திருக்கிறேன்.

'பாங்கிக் கணக்கு எவ்வளவு' என்று எம்.ஜி. ஆரைக் கேட்டால், இந்தியன் பாங்கி, இராயப்பேட்டை — இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், மயிலாப்பூர் — கிண்டிகேட் பாங்கிக், பிரடிவே என்று எழுதியிருக்கிறாரே தவிர, எவ்வளவு பணம் என்பது பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை!

'ஒட்டுக் காங்கிரசில் சேரவில்லை'

துரை கோவிந்தராசன் அறிவிப்பு

சென்னை, நவ 3—

கந்தர்வக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் துரை கோவிந்தராசன், கழகத் தலைவர் கலைஞர் அவர்கட்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:—

''நான் அ. தி. மு. க.-வில் (எம். ஜி. ஆர். கட்சியில்) சேர்ந்துவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். டி. சோம[illegible]ரம் அவர்களுடன் எம். ஜி. ஆர். அவர்கள் இல்லத்துக்குச் சென்றிருந்தது உண்மை.

ஆனால், நான் அ. தி. மு. க.-வில் சேர்ந்துவிட்டேன் என்ற செய்தி உண்மைக்கு முற்றிலும் மாறானதாகும்.

நான் எனது உடல் — பொருள் — ஆவி அனைத்தையும் கழக வளர்ச்சிக்குத் தத்தம் செய்யத் தயாராக இருக்கிறேன்.

'கழக வளர்ச்சியே எனது வளர்ச்சி' என்ற கருத்துடைய நான், தங்கள் தலைமையில் என்றும் பணியாற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன்.''

அ[illegible]விப்பு

நாளை (4—11—[illegible]) அலுவலகத்துக்கு [illegible]கை யால், 'நம் நாடு' அடுத்த இதழ் 6—11—72-ல் சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

சட்டம்--ஒழுங்கு கெட்டிருப்பது எங்கே?

இந்திரா கட்சி அமைச்சர்களின் 'திக்விஜயம்' அங்கெல்லாம் நடக்குமா?

சென்னை, அக். 3—

"வன்முறைகளுக்கு எதிராக எவரும் இன்று எச்சரிக்கை செய்யவில்லை; ஆனால் வன்முறைகளை ஒடுக்க முயற்சிக்கும் அரசுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்!

தமிழ்நாட்டில், சட்டம் -- அமைதி -- ஒழுங்கு கெட்டுவிட்டது என்று அங்கலாய்ப்பவர்கள் ஒன்றை உணரவேண்டும்; இந்த ஒரு மாத காலத்தில் இங்கு நான்கு இடங்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது -- அதுவும் சாதாரண ரவைகள்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன; இதிலே ஒரு முதியவர் -- ஒரு இளைஞர் இறந்திருக்கின்றனர்; அதற்காக அரசின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழகப் பொதுக்கூட்டத்தில் கலவரம் நடந்தபோது எடுக்கப்பட்ட நடவடிக்கையாலும், சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் வீடு தாக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட நடவடிக்கையாலும், அமைச்சர் மன்னை நாராயணசாமி பேசிய கூட்டத்தில் கல்லெறியப்பட்டு அவரது தலையில் காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கையாலும்தான் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கின்றன.

எந்த ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தாலும் அதை வைத்துக்கொண்டு, 'தமிழ்நாட்டில் சட்டம் -- அமைதி ஒழுங்குக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது' என்று சொல்ல நினைக்கிறார்கள்; மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியமும் -- மோகன் குமாரமங்கலமும் மதுரையில் சுக்லாவும் இப்படிப் பேசியிருக்கிறார்கள்.

பஞ்சாபி பாரீரோ!

இப்படி மத்திய அமைச்சர்கள் தமிழ்நாட்டுக்குவந்து 'மத்திய அரசு பார்த்துக்கொண்டிருக்காது' என்று கலகக்காரர்களைத் தூண்டிவிடும் வகையில் பேசுகிறார்கள் -- நடந்து கொள்கிறார்கள்!

தமிழ்நாட்டில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இதே அக்டோபர் மாதத்தில்தான் பஞ்சாப் மாநிலத்தில் -- சந்திகாரில் சினிமா டிக்கெட்டிற்குச் சலுகை கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

5—10—72-ல் கட்டுக்கடங்காத மாணவர்கள் கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; 4 மாணவர்கள் சாவு -- 27 மாணவர்கள் படுகாயம்— 20 போலீசார் கல்வீச்சில் காயமடைந்தனர் -- கண்ணீர்ப்புகை வீச்சு!

6—10—72 அன்று 2 பஸ்களுக்குத் தீ வைக்கப்பட்டது! ஜாக்ரான் இரயில் நிலையத்தில் சான்றேடுகளுக்குத் தீயிடப்படுகின்றன; ஜாக்ரான், லூதியானா ஆகிய பகுதிகளில் ரகளை.

12—10—72-ல் சந்திகாரில் கண்டன ஊர்வலம்; பதாசிஸ்வாலா -- ராஜ்புராபால் -- தலைகே இரயில் நிலையங்கள் தீயிடப்பட்டன: பஞ்சாப் நேஷனல் பாங்கி -- சூப்பர் மார்க்கெட் -- நகரசபைக் கட்டிடங்கள்மீது மாணவர்கள் கல்வீச்சு நடத்துகின்றனர் -- பஞ்சாபில் மீண்டும் ரகளை!

24—10—72-ல் லூதியானாவில் மாணவர்கள் ஒரு பஸ்சுக்குத் தீ வைத்தனர்; 12 முறை போலீசார் சுட்டனர்; 100 மாணவர்கள் கைது; 6 நகரங்களில் இராணுவம் ரோந்து வருகிறது; 144 தடை உத்தரவு போடப்பட்டது.

பாட்டியாலாவில் மாணவர்களைக் கலைக்கத் துப்பாக்கிச் சூடு.

25—10—72-ல் அமிர்தசரசில் 300 மாணவர்கள் கொண்ட கூட்டத்தைக் கலைக்கக் கண்ணீர்ப்புகை வீச்சு -- அஞ்சல் நிலையத்திற்குத் தீ வைத்தனர்.

ஜலந்தர் -- பாட்டியாலா -- மற்ற பகுதிகளில் கலவரம்; 3,500 கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்!

26—10—72-ல் ஜலந்தர் அருகிலுள்ள காலாபச்ரா இரயில் நிலையத்திற்குத் தீவைக்கப்பட்டிருக்கிறது.

கேரளத்தைக் காணீரோ!

கேரளத்தில் 18—10—72 அன்று இளைஞர் காங்கிரசு -- கேரள மாணவர் யூனியன் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த குண்டர்களின் அட்டகாசம் அதிகரித்துவிட்டது; 'இதனால் சட்டம் -- ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது;' என்று கேரள காங்கிரசுத் தலைவர் கே. எம். ஜார்ஜ் குற்றஞ்சாட்டுகிறார்!

குசராத் பற்றிக் கூறுவதென்ன?

குசராத் மாநிலம் வனஸ்கந்தா மாவட்டம் பலன்பூரில் கோஷ்டித் தகராறு; ஊர்வலம் போனபோது ரகளை -- கல்லெறி -- கைகலப்பு -- 7 கடைகளுக்குத் தீ; போலீசார் கண்ணீர்ப்புகை வீச்சு; துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் படுகாயம்; 3 போலீசார் உட்பட 23 பேருக்குக் கல்லெறிக் காயம்; 370 பேர் கைது செய்யப்பட்டனர்.

17—10—72 மாலை 6-மணி முதல் 19—10—72 காலை 8-மணி வரை ஊரடங்குச் சட்டம்!

18—10—72 அன்று ஆமதாபாத்தில் ரகளை -- ஊரடங்கு உத்தரவு!

மத்தியப் பிரதேசத்தை மறந்தீரோ!

மத்தியப் பிரதேசத்தில் சர்குஜா மாவட்டம் ஜக்ராகங் என்ற ஊரிலுள்ள தனியார் நிலக்கரிச் சுரங்கத்தில் 10,000 பேர் 44 நாட்களாக வேலை நிறுத்தம்; போனஸ் -- ஊதிய உயர்வு கேட்டு நடத்திய போராட்டத்தில் 6—10—71 அன்று போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 2-பேர் சாவு; 7-பேர் படுகாயம் -- 14 போலீசாருக்குக் காயம்!

மராட்டியத்தில் மாண்டனரே!

மராட்டிய மாநிலம், பம்பாயில், 21—10—72 அன்று விலைவாசி உயர்வைக் கண்டித்து ஊர்வலம் வந்தவர்கள்மீது துப்பாக்கிச் சூடு -- 4 பேர் இறந்தனர்; விவசாயிகள் தலைவர் பட்டிலின் மருமகன் சுரேஷ் பட்டில் செத்தவர்களில் ஒருவர்; கல்லெறியால் 78 போலீசாருக்குக் காயம்!

அசாமில் அமர்க்களம் ஏனோ?

அசாம் மாநிலத்தில் 5-10-72 முதல் பாட மொழித் தகராறு; மாநிலம் முழுவதும் கலகம்; 144 தடையுத்தரவு!

12-10-72 அன்று 7 நகரங்களில் ஊரடங்குச் சட்டம், நவ்பாங்கில் கத்திக்குத்துக்கு ஒருவர் பலி; கிராமங்களில் தீயிடல் — கொள்ளை — குத்து; 869 பேர் கைது; 24 மணிநேரம் ஊரடங்குச் சட்டம்!

13-10-72 அன்று 3 இடங்களில் துப்பாக்கிச் சூடு — ஒருவர் சாவு!

15-10-72 துலியாஜான் நகரில் ஊரடங்குச் சட்டம்; கத்திக்குத்தால் 8 பேர் காயம்!

23-10-72 ஜோர்காட்டில் தீவைப்புச் சம்பவம் — பதட்ட நிலை — போலீசு ரோந்து!

கருநாடகம் 'காட்சி' தந்ததா?

கருநாடக மாநிலத்தில் 20-10-72 அன்று பெங்களூர் டெலிபோன் தொழிற்சாலையில் கலகம் செய்த கும்பலைக் கலைக்கப் போலீசார் சுட்டதில் 18 பேருக்குப் படுகாயம்.

21-10-72 இதே தொழிற்சாலையில் கலகம்; 9 தட்வை கண்ணீர்ப் புகை வீச்சு — தடியடிப் பிரயோகம்.

18-10-72-ல் தசரா ஊர்வலத்தின்போது பெங்களூர் வட்டகுதியிலுள்ள மூனிரெட்டிபாளையத்தில் நடந்த மோதலில் 3 பேர் கொல்லப்பட்டனர்; 20 போலீசார் காயம்; பொதுமக்களில் 15 பேருக்குக் காயம்; ஒரு போலீசுக்காரர் குத்தப்பட்டுச் செத்தார்.

இப்படி இந்தியா முழுவதும் சட்டம்—ஒழுங்கு நிலை குலைந்து போகும் நிலைமை ஏற்பட்டும், எந்த மத்திய அமைச்சராவது இந்த மாநிலங்களுக்கெல்லாம் சென்று மத்திய அரசு கவனித்துக் கொள்ளும் என்று சொன்னதுண்டா?

திராவிடர் இயக்கத்தில் நாங்களெல்லாம் சேர்ந்தபோது, இந்த முதலமைச்சர் பதவி — அமைச்சர் பதவி கிடைக்கும் என்று சேரவில்லை; ஆகவே இப்படிப்பட்ட பொறுப்புக்கள் பறிக்கப்பட்டாலும் -- கோட்டையிலிருந்து நாங்கள் வெளியேற்றப்பட்டாலும் கவலைப்படப்போவதில்லை!

ஆனால் பஞ்சாபுக்கு ஒரு நீதி — தமிழ்நாட்டுக்கு ஒரு நீதியா?
பீகாருக்கு ஒரு நீதி — தமிழ்நாட்டுக்கு ஒரு நீதியா?
மராட்டியத்துக்கு ஒரு நீதி — தமிழ்நாட்டிற்கு ஒரு நீதியா?
அசாமுக்கு ஒரு நீதி — தமிழ்நாட்டுக்கு ஒரு நீதியா?
மைசூருக்கு ஒரு நீதி — தமிழ்நாட்டுக்கு ஒரு நீதியா?
கேரளத்திற்கு ஒரு நீதி — தமிழ்நாட்டுக்கு ஒரு நீதியா?

—முதலமைச்சர் கலைஞர்

(தமிழ் மாநிலம் அமைந்த 16-வது ஆண்டு விழாவில்)

புகார் கூறுவதைத் தவிர்க்க இசை நிகழ்ச்சியாம்

இரயில்வே அமைச்சரின் விநோத யோசனை

பம்பாய், அக். 31—

இரயில்வேக்களைப் பற்றி எவ்வளவோ புகார்கள் கூறப்படுகின்றன; பலர் பலவிதமான குறைகளை எடுத்துக்காட்டுகிறார்கள்; இந்தக் குறைகளையெல்லாம் எப்படித் தீர்ப்பது என்பது பற்றிப் புதிய இரயில்வே அமைச்சரான டி. ஏ. பாய் இதற்கு ஒரு யோசனை கூறியிருக்கிறார்.

"நீண்டதூர இரயில்களில் இசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தால் என்ன" என்று அவர் நினைக்கிறார்.

நீண்ட தொலைவு பயணம் செய்பவர்களுக்கு இரயில்களில்பொழுது போவதில்லை; எனவே, இரயில்வேக்கள்மீது என்ன புகார்கள் சொல்லலாமென்று நிதானமாக யோசித்தும் பார்ப்பதற்கு அவர்களுக்கு நிறையநேரம் இருக்கிறது.

"இம்மாதிரி யோசனைகளுக்கு இடம் கொடுக்காமல் அவர்கள் பொழுதைப் போக்குவதற்கு ஏதாவது மாற்று வழி கண்டுபிடிப்பது பயனுள்ளதாக இருக்கலாம்" என்று இரயில்வே அமைச்சர் கருதுகிறார்.

"சாமான் ஏற்றிக்கொண்டு வரும் வாகன்களை உடைத்துத் திருடுவது -- டிக்கெட் இல்லாமல் பயணம் செய்வது போன்ற தொல்லைகள் இல்லாமல் இருந்தால் இரயில்வே பயணத்தைப் பற்றிய புகார்களுக்கு இடமிராது" என்று அவர் குறிப்பிட்டார்.

"திருட்டு -- டிக்கெட்டில்லாமல் பயணம் ஆகிய காரணமாக இரயில்வேக்கு ஆண்டுக்கு முறையே ரூ. 14 கோடி -- ரூ 22 கோடி இழப்பு ஏர்படுகிறது" என்றார்.

"மேலும், போலீசுப் பாதுகாப்புக்காக இரயில்வேத் துறை ஆண்டுக்கு ரூ 14 கோடி செலவிட வேண்டியிருக்கிறது; சென்ற பத்து ஆண்டுகளில் இந்த வகையில் ரூ 500 கோடி ஆகியிருக்கிறது" என்றும் கூறினார்.

"இந்த ரூ 500 கோடி இருந்தால் எந்த சௌகரியங்களை வேண்டுமானாலும் செய்திருக்கலாம்" என்றும் குறிப்பிட்டார்.

பொய்ச் செய்திக்கு மறுப்பு

சென்னை 41-வது வட்டம் சத்தியமூர்த்தி நகரில் இயங்கிவரும் கருணாநிதி பொதுப்பணி மன்றம் கலைக்கப்பட்டுவிட்டதாக மாற்றுக் கட்சி ஏடு ஒன்றில் வெளியான பொய்ச் செய்தியை மறுத்து -- அந்த மன்றச் சார்பில் தோழர் சோ. ஜே. மரியான் பின்வருமாறு அறிவிக்கிறார்:—

"1967-ம் ஆண்டில் துவக்கப்பட்ட கருணாநிதி பொதுப் பணி மன்றமும் -- அஞ்சுகம் அம்மையார் இரவுப் பள்ளியும், கட்டடத்தில் இயங்க வேண்டுமென்பதற்காக இதுவரை இயங்கிவந்த இடத்திலிருந்த ஓலைகள்-கம்புகள் ஆகியவற்றை நான்கு மாதங்கட்கு முன்பு பிரித்தோம்; அவை இன்னமும் அங்கேயே இருக்கின்றன; இதனை வேண்டுமென்றே திரித்துக்கூறி, புதிய கட்சிக்காரர்கள் பொய்ப் பிரசாரம் செய்கின்றனர்.

மேலும், மன்ற அவைத் தலைவர் மனறத்திற்குத் தெரிவிக்காமல், தம் சுய விருப்பப்படி புதுக் கட்சியில் சேர்ந்துவிட்டார் என்று தெரிந்ததும், அவரை மற்ற நிர்வாகிகள் மன்றப் பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டனர்.

அறிஞர் அண்ணாவின் கொள்கைகளை ஏற்றுச் சார்பு மன்றம் துவங்கிய நாங்கள், தொடர்ந்து அண்ணாவின் கொள்கை வழி இயங்கிவரும் கழகத்தையும் -- கலைஞர் தலைமையிலான கழக அரசையும் கட்டிக்காப்பதில் உறுதியுடன் இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்."



புத்தம் புதிய திட்டம்— அத்தனையும் உங்களுக்கே!

1972 அக்டோபர் முதல் அளிக்கப்படும் பரிசுகளில் பரபரப்பூட்டும் மாறுதல்கள்

மூன்று வரிசைகளுக்கு, மொத்தப் பரிசுகளும் பரிசுத் தொகையும்:

3	முதல் பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	1,00,000	= ரூ	3,00,000
6	இரண்டாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	10,000	= ரூ.	60,000
225	மூன்றாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	1,000	= ரூ.	2,25,000
300	நான்காவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	500	= ரூ.	1,50,000
1500	ஐந்தாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	100	= ரூ.	1,50,000
3000	ஆறாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	50	= ரூ.	1,50,000

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு கீழ்க்கண்டபடி ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

முதல் பரிசுக்கு	ஒவ்வொன்றும் ரூ. 1500/- வீதம்	6 ஆறுதல் பரிசுகள்	= ரூ. 9000/-
இரண்டாவது பரிசுகளுக்கு	ஒவ்வொன்றும் ரூ. 500/- வீதம்	12 ஆறுதல் பரிசுகள்	= ரூ. 6000/-

மொத்தப் பரிசுகள்: 5052

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 10,50,000

குலுக்கல் நாள்: 10—11—1972

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

* 3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.



தனிப்பட்ட ஒருவரால் கழகம் வளரவில்லை

ஒரு வேளை உணவையும் தியாகம் செய்து கட்சியை வளர்த்தவர்கள் கழகத் தொண்டர்கள்

அவர்களின் உணர்ச்சியை -- உழைப்பைச் சந்தேகிப்பதா?

பொதுச்செயலாளர் நாவலர் வினா?

மதுரை, நவ 3—

"இரண்டு ரூபாய் [illegible] வாங்கிய கழகத் தோழன் அறிஞர் அண்ணாவின் சிறப்புக் கூட்டத்திற்கு ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு -- ஒரு வேளை சாப்பிடாமல் இந்தக் கழகத்தை வளர்த்த உணர்ச்சியெல்லாம் நாணயமற்ற உணர்ச்சியா? சந்தேகப்படவேண்டிய உணர்ச்சியா? அத்தனைப் பேர்களுடைய சரங்களும் கறைபட்ட கரங்களா?"

என்று, கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மதுரை திலகர் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் வினவினார்: அவர்மேலும் குறிப்பிட்டதாவது:—

"மக்கள் பலரும் தங்கள் தங்களுடைய பங்கைச் செலுத்தித் தி. மு. கழகத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள்; கலைஞர்களும்—வழக்கறிஞர்களும் — உழைப்பாளர்களும் — பாட்டாளிகளும் — தாய்மார்களும் — எழுத்தாளர்களும்— அவரவர்களுடைய பங்கைக் கழகத்திற்கு செலுத்தி வந்திருக்கிறார்கள்; அந்த அளவுக்கு எம். ஜி. ஆரும் பணியாற்றி வந்திருக்கிறார் -- அதை நாங்கள் மறுக்கவில்லை.

1953-ல், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் இந்தக் கழகத்திற்கு வந்து சேர்ந்தார்; அப்போது 'புரட்சி நடிகர்' என்ற பெயர் இல்லை; கழகத்தில் சேர்ந்த பிறகு நாங்கள் வைத்த பெயர்தான் 'புரட்சி நடிகர்' என்பது; கழகத்தை விட்டு விலகிய வரையில் அவர் புரட்சி நடிகராகத்தான் இருந்தார்; எப்போது அவருக்கு "பாரத்" என்ற பட்டம் வந்ததோ அன்று முதலே அவர், புரட்சி நடிகர் என்பதை மறந்தார் - மக்கள் திலகம் என்பதை மறந்தார்; 'பாரத்' எம். ஜி. ஆர். என்று சொல்லத் தொடங்கிய அன்றிலிருந்து அவரது போக்கு—கொள்கை அத்தனையும் மாறிவிட்டது [illegible] என்பதை நாட்டு மக்கள் நன்கு [illegible] அறிவார்கள்.

ஒரு தேர் தனியாக நகருவது கிடையாது; எல்லோரும்சேர்ந்து வடம் பிடித்தால்தான் தேர் நகருமே தவிர, தனிப்பட்ட நபர் ஒருவர், 'நான் இழுத்ததனால் தான் தேர் நகர முடிந்தது' என்று சொன்னால், யாராவது ஏற்றுக் கொள்வார்களா?

அதுபோல், எல்லோரும் சேர்ந்து பாடுபட்டதன் காரணமாகத் தான் தி.மு. கழகம் வளர்ந்ததே தவிர, தனிப்பட்ட மனிதரால் இந்தக் கழகம் வளரவில்லை.

இந்தக் கழகம் நெடுஞ்செழியனால் வளர்ந்தது அல்ல; நெடுஞ்செழியன் கழகத்தில் இருந்ததனால் நெடுஞ்செழியனுக்குப் புகழே தவிர -- கழகத்தில் நான் சேர்ந்திராவிட்டால் நெடுஞ்செழியனாக இருந்திருப்பேனே தவிர—உங்களால் பாராட்டத்தக்க அளவுக்கு மனிதனாக நான் ஆகியிருக்க மாட்டேன்.

அவர் (எம் ஜி ஆர்.) இங்கு வந்ததற்குப் பிறகு ஏற்பட்ட விளைவு என்ன? ஏற்கனவே புகழோடு இருந்துவிட்டு இந்தக் கழகத்திற்கு வந்தபிறகு புகழ் குறைந்துவிட்டதா என்று கேட்கிறேன்.

இதே மதுரையில், 1958-ல் மதுரை முத்து அவர்கள், 'தங்கவாள்' கொடுத்தது மாதிரி, வேறு சிறப்பான நிகழ்ச்சி எந்த ஆண் மகன் இவருக்குக் கொடுத்து இருக்கிறார்?

எம். ஜி. ஆரை இழப்பதினால் எங்களுக்கு என்ன இலாபம் -- அவரை இழந்ததினால், கழகத்திற்கு என்ன புதிய இலாபம் வந்துவிடப் போகிறது -- ஒன்றுமில்லை; ஆனால், ஒரு சாதாரணத் தொண்டனை இழந்துவிட்டால், 'கழகத்திற்கு நட்டம்' என்று நாங்கள் கணக்கிடுகிறோம்.

எங்களை ஆளாக்கிவிட்ட அண்ணா எங்களுக்கு அடிக்கடி சொல்லுவது—'பத்தோடு ஒன் சேர்ந்து பதினொன்று என்று ஆகும் வல்லமையைக் காட்டவேண்டுமே தவிர, 'பத்து ஒன்பதாயிற்று; ஒன்பது எட்டாயிற்று' என்ற நிலை ஏற்படக்கூடாது" என்று!

சம்பத் அவர்கள் கழகத்தைவிட்டு விலகியபோது, பொதுக்குழுவில் அண்ணா அவர்கள் எங்களுக்கு சொன்னதை நினைவுபடுத்த விரும்புகிறேன்; எப்படிப்பட்ட கட்டம் வந்திருந்தால் அவரை இழக்கவேண்டிய அளவுக்கு நாங்கள் எல்லாம் வந்திருப்போம் என்பதை உணருவது அவசியம்.

சாதாரணமாக உடலில் உள்ள ஓர் உறுப்பை இழக்க வேண்டிய கட்டம் எப்போது ஏற்படும்? -- விரலிலே புரைமோடி விட்டால் -- டாக்டர்கள் அதற்கு வேண்டிய சிகிச்சைகள் எல்லாம் செய்து பார்த்துப் பயன் அளிக்காமல் போய்விட்டால் -- கடைசியில் வேறு வழியில்லாமல், 'விரலை எடுத்தால்தான் -- உயிரை காப்பாற்ற முடியும்; என்ற கட்டம் வந்தால்தான் -- விரலை வெட்டி எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது; சாதாரணமாக இருக்கும்போது விரலை இழப்பதில் யாருக்கு மகிழ்ச்சி ஏற்படும்?"

பொய்ச் செய்தி வெளியிட்ட ஏட்டின் மீது நடவடிக்கை

பம்பாய் தி. மு. க. அறிவிப்பு

சென்னை, நவ. 2—

பம்பாய் தி. மு. கழக நிர்வாகிகளில் ஒருவரான த. மு. பொற்கோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

"ஹெலிகாப்டர் ஊழலும்--தி.மு. கழகமும்' என்ற தலைப்பில் மாலை ஏடு ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

அதில், பம்பாயில் பல்வேறு விமானக் கம்பெனிகளிலும், தி. மு. கழகப் பிரமுகர்கள் வீடுகளிலும் நடந்த சோதனைகளில் பல ஊழல் இரகசியங்கள் அம்பலமாகி இருப்பதாக வந்த செய்தி முற்றிலும் தவறானதாகும்.

எந்தக் கழகத் தோழர் வீட்டிலும் -- அந்த ஏட்டில் வெளியிட்டதுபோல் -- சோதனைகள் நடைபெறவில்லை,

பொய்ச் செய்தி வெளியிட்ட ஏட்டின்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்."

விநாயகம் வீட்டில் மறியல் நடந்ததா?

எங்கே -- எப்போது -- யார் சொன்னார்கள்?

'புரட்சித் தலைவர்' அவிழ்த்துவிடும் 'புதுச் சரக்கு'

"1952-ம் ஆண்டு கே. விநாயகம், நாம் அப்போது ஆதரித்த கூட்டணியில் வெற்றி பெற்றார்; பிறகு கட்சி மாறினார்; நாம் அவர் வீட்டிற்குமுன் மறியல் செய்தோம்; அப்போதைய ஆட்சி தடியால் அடிக்கவில்லை -- கண்ணீர்ப் புகை விடவில்லை -- சுடவில்லை."

—புதுக் கட்சித் தலைவர் பேச்சு

புதுக் கட்சி கண்ட புரட்சித் தலைவரே -- உமக்கு இந்தத் தகவலை எந்த 'ரெக்ரூட் அரசியல்வாதி' சொன்னார்? நீர் சொல்லியதில் கடுகளவாவது உண்மை இருக்கிறதா?

1952 தேர்தலின்போது நீர் அரசியலிலேயே இல்லை; சினிமா ஸ்டுடியோவைத் தவிர உமக்கு வேறு புகலிடம் இல்லை என்பது உண்மை; எனவே, அன்றைய அரசியல் நிலை உமக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை; இனிமேலாவது தெரிந்துகொள்ளும்!

1952-ல் பிரஜா சோஷலிஸ்டு கட்சி சார்பில் கே. விநாயகம், செங்கற்பட்டு மாவட்டத்தில் போட்டியிட்டது உண்மை; அவரைத் தி. மு. கழகம் ஆதரித்ததும் உண்மை. அவர் கட்சி மாறியது 1957 தேர்தலின்போதுதான்; அப்போது யாரும் அவர் வீட்டிற்குமுன் மறியலும் செய்யவில்லை -- அவர் கட்சி மாறியதற்காகத் தி. மு. கழகம் கவலைப்படவுமில்லை!

உண்மையில் மறியல் செய்ய வேண்டியவர்கள் பி. சோ. கட்சியினரே தவிர தி.மு.க. அல்ல!

விநாயகத்தை 'நாம்' ஆதரித்தோம் -- கட்சி மாறியதும் அவர் வீட்டில் 'நாம்' மறியல் செய்தோம் என்று நீர் கூறுகிறீரே -- யார் அந்த 'நாம்'?

1952-ல் கழக ஆதரவு பெற்று வெற்றி பெற்றவுடனேயே கட்சி மாறிய மாணிக்கவேலர் வீட்டில்கூட தி.மு.க. மறியல் செய்யவில்லை; அடுத்துக் கட்சி மாறிய இராமசாமி [illegible] வீட்டின் முன்பும் மறியல் செய்யவில்லை; ஐந்தாண்டு கழித்துக் கட்சி மாறிய விநாயகம் வீட்டு முன்பு தி. மு. க. மறியல் நடத்தியதாகக் கூறுவது எவ்வளவு பெரிய 'சரித்திரப் புளுகு'!

அப்படி யாரேனும் மறியல் நடத்தியிருக்க வேண்டுமென்றால், தமிழரசுக் கழகம் நடத்தியிருக்கலாம்; ஏனெனில், கட்சி மாறுவதற்கு முன் தமிழரசுக் கழகத்தில்தான் அவர் இரண்டறக் கலந்திருந்தார்; அவர்களும் மறியல் நடத்தவில்லை.

1957-ல் தேர்தல் டிக்கெட் பெறும் நேரத்திலேயே திரு. விநாயகம் காங்கிரசில் சேர்ந்தார்; அந்த நேரத்தில் அதே விநாயகத்தை எதிர்த்து ஜேசுபாதம் என்ற வேட்பாளரைக் கழகம் நிறுத்திப் போட்டியிட்டது என்ற தகவலையும் புரட்சியாருக்கு நினைவுபடுத்தியாக வேண்டியுள்ளது!

கட்சி மாறியதற்காக அன்றும் சரி — இன்றும் சரி — எந்த எம். எல். ஏ. வீட்டிலும் தி.மு.க. மறியல் நடத்தவில்லை. சிண்டிகேட்டிலிருந்து அனந்தநாயகி இண்டிகேட்டுக்கு மாறியபோதுதான் பழைய கட்சிக்காரர்கள் அவர் வீட்டுமுன் மறியல் நடத்தினர்கள்!

விவரம் புரியாமல் — தமிழக அரசியலையே புரிந்துகொள்ளாமல் — தப்பும் தவறுமாக பிதற்ற வேண்டாம்; பேசுவதற்கு மேடையும் அந்தப் பேச்சைப் போடுவதற்கு ஏடுகளும் மலிவாகக் கிடைக்கின்றன என்பதாலேயே எதை வேண்டுமானாலும் பேசுவது என்றால், அது தமிழ்நாட்டு அரசியலுக்கு ஒத்து வராது — அபத்தமாகத்தான் முடியும்!

நீர் பேசுவதெல்லாம் 'அரசியல்' என்று விவரம் தெரிந்தவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! விவரம் தெரியாதவர்களை பல நாள் ஏமாற்றிக் கொண்டிருக்கமுடியாது!

—ஜா. செ.

தமிழ் இனமே--விழித்து எழு!

தமிழ்ப் பகைவர்களின் சதியை முறியடிப்போம்

பாடுபட்டுப் பெற்ற ஆட்சியை பறிகொடுத்துவிட மாட்டோம்

...லம்புச் செல்வர் ம. பொ. சி. எழுச்சி முரசம்

சென்னை. நவ. 3—

...திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை நாம் ஆதரிக் ...கிறோம் என்றால், இந்த ஆட்சியைக் காப்பது நம்முடைய ...டமையாகும்; இங்கே நடப்பது திராவிட முன்னேற்றக் ...ழகத்தின் ஆட்சியல்ல -- தமிழர் சாதியின் ஆட்சி! ...தை அழிக்கும் நினைப்பை -- நாலரைக் கோடி தமிழ் ...க்களுக்கு விடுத்த அறைகூவலை மானமுள்ள தமிழன் ...ற்கத் தயாராகிவிட்டான்"

...ன்று தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவ...னம் அவர்கள் முழங்கினார்.

...சென்னை—இராசேசுவரி திரு... மண்டபத்தில் 1—11—72 ...பெற்ற தனித் தமிழ் மாநில ... ஆண்டு நிறைவு விழாவில் ...கையில் அவர் மேலும் கூறிய ...து:—

"நாம் பாடுபட்டுப் படைத்த ஓர் ஆட்சி—பல்லாயிரவரைச் சிறைக்கு அனுப்பி கண்ட இந்த ஆட்சி—நாம் வாழ்வதற்கு வழி வகுத்த கட்சியிலிருந்து வெளி பேறி படைத்த ஓர் ஆட்சி அழியப்போவதை நாம் பார்ப்போமானால்; நம்மைவிட ஏமாளிகள் -- கோமாளிகள் வேறு யாருமே இருக்க முடியாது!

யார் ஆண்டாலும் தமிழகத்தைத் தமிழர் ஆளவேண்டும் -- தமிழர் ஆளுகிறார்கள்.

இந்த நாட்டை அரசியல் ரீதியாக எதிர்க்கட்டும் -- அங்கே போய் நான் குறுக்கே நிற்க விரும்பவில்லை!

சனநாயகரீதியாக எதிர்க்கட்டும்-- அதற்கு நான தடையாக இருக்க விரும்பவில்லை!

பொருளாதார முற்போக்குரீதியாக எதிர்க்கட்டும்—அதற்கு நான் எதிராக இருக்க விரும்பவில்லை!

ஆனால் தமிழின் மீது பற்றுள்ள ஆட்சி--தமிழ் இனத்தின் காவல் ஆட்சி என்பதற்காகத் தமிழின் பகைவர்கள் இதை அழிக்க நினைத்தால், அந்த முயற்சியைத் தடுக்க முனைவது தமிழரசுக் கழகத்தின் கடமையாகும் என்பதை இந்த நாளில் ஒரு பிரகடனமாகவே அறிவிக்கிறேன்.

அது நடந்தால் என்ன ஆகும்?—அது, கற்பனை செய்து பார்க்க வேண்டிய விஷயம்; நாளைக்கு என்ன ஆகும் என்பதை நான் சர்ச்சை செய்ய விரும்டவில்லை; நேற்று என்ன ஆனது என்பதை நான் எடுத்துக் காட்டுகிறேன்.

பத்தாம் நூற்றுண்டிலே--பதினேராம் நூற்றுண்டிலோ இராசராசன் ஆட்சி தோன்றியது; இராசராச சோழன் அரசு ஓர வல்லரசு; அது அழிந்தது; தானாக அல்ல -- பாண்டியனுடைய பகையால் அது அழிந்தது!

பாண்டியனும் தானாக அழிக்கவில்லை -- இலங்கை அரசின் துணையோடும் -- பிற அந்நியனுடைய துணையைப் பெற்றும் அழித்தான்!

பலவீனர்கள் எப்போதும் பிறர் துணையைத்தான் தேடுவார்கள்; அதுபோல், இராசராச சோழன் ஆட்சியை எதிர்க்க நினைத்த பாண்டியன், பலவீனம் காரணமாகத் தமிழர் அல்லாதார ஆட்சியில் அடைக்கலம் புகுந்து -- அவர்கள் துணை பெற்று -- சோழ ஆட்சியை அழிக்க முடிந்தது!

அழிந்ததைப் பற்றிக் கவலை இல்லை; அவனாவது ஒரு வல்லரசனாக இருந்தானே என்றால் அதற்கும் அவனுக்குச் சக்தியில்லை! கையேந்திப் பெற்றவன் நிலைக்க முடியவில்லை!

பாண்டியனைச் சோழன் எதிர்த்து -- சோழனைப் பாண்டியன் எதிர்த்து முடிவில் என்ன ஆயிற்று? விஜயநகர சாம்ராஜ்யம்—ஆந்திர சாம்ராஜ்யம் வந்து அடிமைப்படுத்தி ஆண்டதுதான் மிச்சமாயிற்று.

ஆங்கிலேயன் அடிமைப்பட்டது ஆங்கிலேயர்கட்குத்தான்! முகலாயர் அடிமைப்பட்டது முகலாயர்கட்குத்தான்!

நாமோ, ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே அடிமைப்பட்டுவிட்டோம்; எப்போது சோழப் பேரரசு வீழ்ந்ததோ அன்றே தமிழர் சாதி அடிமைப்பட ஆரம்பித்துவிட்டது!

விஜயநகர சாம்ராஜ்யமும் -- முகலாய சாம்ராஜ்யமும் அந்நியர் ஆட்சிகள்தான என்பதில் ஐயப்பாடே கிடையாது!

முகலாயர் ஆட்சி வந்தது; அந்த ஆட்சியை அழிக்க ஆங்கிலேயர் ஆட்சி வந்தது; அதைத்தான் பாரதி சொன்னான் -- 'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர், வாராதுபோல் வந்த மாமணியைத் தோற்போமோ' என்று!

ஓராயிரம் ஆண்டுக்கால அடிமைத் தமிழன் மராட்டியனுக்கு அடிமைப்பட்டான்; கன்னடருக்கு அடிமைப்பட்டான்; முகலாயருக்கு அடிமைப்பட்டான; ஆங்கிலேயருக்கு அடிமை[illegible]டான்; புதுவை, பிரெஞ்[illegible]னுக்கு அடிமைப்பட்ட[illegible]

இதற்குப் பிறகுதான் சுதந்திரம் கிடைத்தது இந்த நாட்டுக்கு!

இதை ஏன் சொல்கிறேனென்றால் 'இந்த ஆட்சி கவிழ்ந்தால், என்ன ஆகும்' என்பதற்கு!

நம் ஆட்சி கவிழ்ந்தபோது என்ன நடந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டிய நல்ல நாள் இந்த நாள்.

தமிழ் ஆட்சி -- தமிழர் என்ற உயர்வுடைய ஆட்சியான இராஜராஜ சோழனின் சோழப் பேரரசு வீழ்ந்த பிறகு பாண்டியன் வீழ்ந்தான்!

ஆங்கிலேயரை வெளியேற்றிய பின்னரும் இந்த மாநிலத்தில் தமிழ் ஆளமுடிந்ததா? நாம் இந்தியராக இருந்தோம் அல்லது பிராமணர் அல்லாதாராக இருந்தோம்.

பிராமணரல்லாதார் உணர்ச்சி பலப்பல சமூக நீதிகளுக்கும் பயன்பட்டது என்ப[illegible] ஒப்புக்கொள்ள நான் [illegible]க்கப்படப் போவதில்லை; அ[illegible]லும்கூட, தமிழ் உணர்ச்சிக்[illegible] அதுவும் கேடாகத்தான் [illegible]ந்தது என்பதை[illegible]காட்ட நான் தயங்கவும் கூடாது.

பொப்பிலி அரசர் -- பனகல் அரசர் -- முனுசாமி நாயுடு -- வெங்கட கிருஷ்ணரெட்டி என்பதாக நான்கு முதல்வர்கள் இருந்தார்கள்; ஒருவர் பின் ஒருவராக வந்த முதல்வர்கள் எல்லாம் நீதிக் கட்சிமூலம் தெலுங்கராகவே வந்தனர் என்பதுதான் சரித்திரம்!

'மதராஸ் மனதே' என்ற கூச்சல் வேறு எங்கோ எழுந்ததல்ல-- பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் விளைவு!

இப்படி ஆயிரம் ஆண்டுக் காலமாக, 'தமிழன்' என்ற இன உணர்ச்சி வளர முடியாமலே போய்விட்டது!

தேசபக்தியின் விளைவால் -- பிரகாசத்தைத் தலையில் வைத்து நான் ஆடினேன் -- 'ஆந்திர கேசரி பிரகாசம் வாழ்க' என்றேன்; நான் அவரைத் தேசத் தலைவராக எண்ணினேன்; ஆனால் சோதனை வந்தபோது அவர் ஆந்திரத் தலைவராக மாறி, 'மதராஸ் மனதே' என்று கொக்கரித்தார்; அப்போதுதான், 'தேசத் தலைவர் என்று நாம் நினைத்தவர் ஆந்திரத் தலைவர் ஆகிவிட்டாரே' என்று நினைத்தேன்! என்னை நானே உணர்ந்து கொண்டேன்!

இராஜாஜியை இந்தத் தோள்களிலே சுமந்தேன்; நாடு சுற்றி வலம் வந்தேன்; அவரையும், 'தேசத் தலைவர்' என்று எண்ணினேன்; அவரோ, மொழி வழி மாநிலம் அமைகிறபோதுஅதை எதிர்த்தும் போராடினார்!

தமிழ் ஆட்சி மொழி --- பயிற்சி மொழி என்கின்றபோது, அதற்கு எதிர்ப் பாசறை அமைத்து இன்றுவரை போராடிக் கொண்டிருக்கிறார்!

இப்படி, தமிழன் யார் யாரை யெல்லாமோ நம்பி -- அது எதற்காக எல்லாமோ நம்பி ஏமாந்த ஏமாற்றத்தின் விளைவு, 1946 நவம்பர் 21-ல் தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவித்தேன்; என் அனுபவத்திலிருந்து வெடித்து வந்த கழகம் இது!

இந்த இருபத்தைந்து ஆண்டுகளிலே நாம் பட்டபாடு கொஞ்சமல்ல!

எனக்கு சுயசாதிப் பற்றுமில்லை -- பிறசாதிப் பகையும் இல்லை; இந்த இரண்டும் இல்லாமலே இருபத்தைந்தாண்டுக காலம் வாழ்ந்து விட்டேன்; இந்தக் கழகமும் வாழ்ந்து விட்டது!

இந்த அரசு போய்விட்டால் என்ன ஆகும் எனறால், பழைய சுதம்ப சென்னை மாகாணம்தான வரும்!

1956-ல் தட்சிணப் பிரதேசத் திட்டத்தைப் பெற்ற தாய் இராஜாஜி; அதற்குப் பாலூட்டியவர் காமராசர்; இவ்வளவு பேரையும் வென்று, மத்திய-- மாநில ஆட்சிகளை வென்று திராவிட முன்னேற்றக் கழகமும் -- தமிழரசுக் கழகமும் கைகோர்த்ததன் விளைவுதான், 1956-ல் பூத்த புதிய தமிழகம்!

ஆகவேதான், இந்தத் தமிழகம் காக்கப்பட வேண்டுமானால், இன்றுள்ள அரசு நிலைக்கப்பட வேண்டும்; திரும்பவும் தொடர்ந்து வரப்பட வேண்டும்.

இது இல்லையானால், வருகின்ற விபத்து --- ஏன் --- தமிழக உணர்வு கொல்லப்பட்டால அறிஞர் அண்ணா போனால் கலைஞர் -- கலைஞர் போனால இன்னொருவர் -- இப்படி வாழையடி வாழையாகத தமிழ் உணர்ச்சி படைத்த கூட்டம் வரும் என்ற அச்சத்தால், இந்தத் தமிழ் மாநிலம் அழிக்கப்பட்டு விடும்!

பருவம் வந்தது உருவம் தெரிகிறது

அதற்கு நீங்கள் தயாரானால் எதையும் செய்யுங்கள்!

இந்தத் தமிழ் மாநிலம் அமைவதற்கு முன்பு தலைமை நீதிபதி தமிழன் அல்லர்; தலைமைச் செயலாளர் தமிழன் அல்லர்; துறைதேறும் தலைவர்கள் 'தமிழர்கள் அல்லர்; ஆனால் தமிழகம் அமைந்த பிறகு அந்த நிலையெல்லாம் மாறி -- பெரும் அளவுக்கு மாறும் என்ற நம்பிக்கையோடு நாம் இருக்கக் காரணமே இந்த மொழிவழி மாநிலம் தான்!

காமராசரை விட்டு -- காங்கிரசை விட்டு நான் அவர்களை ஆதரிக்கிறேன் என்றால், அதற்குத் தமிழன் என்ற ஒரே உணர்ச்சி தான் காரணமாகும்.

அமைச்சர்கள் பதவியைப் பார்த்து நான் ஏமாந்து உட்கார்ந்திருப்பதுபோல 'கல்கி' கார்ட்டூன் போடுகிறது; இப்போது நடக்கின்ற சண்டையெல்லாம், 'பதவி வேண்டாம்' என்பதற்காகத்தானா?

மதுவிலக்குப் பிரச்சினையில் நான் சிறிது மாறுபட்டவன் என்றாலும், 'எங்கள் உறவு உறுதியானது' என்று நான் பேசியதை, 'அமைச்சர்கள் என்னை நம்பமாட்டேன் என்கிறார்களே' என்று பேசியதாக ஒரு பத்திரிகை போடுகிறது.

அமைச்சர் பதவிதான் என் குறிக்கோள் என்றால், அதை எப்போதோ அடைந்து -- இந்நேரம் சலித்துப் போயிருப்பேன்!

என்னிடம் அதற்காகக் கேட்கப்பட்டபோது, 'பதவி இல்லாததால்தான் நான் பலசாலியாக இருக்கிறேன்; என்னை விட்டு விடுங்கள்' என்று உறுதியாகச் சொன்னவன் நான்!

நான் கட்சிச் சண்டைகளுக்குப் போக விரும்பவில்லை; கட்சிக்குள்ளேயே ஏற்பட்ட 'கோஷ்டி சண்டை'க்குப் போக விரும்பவில்லை; அதை அவர் பார்த்துக் கொள்வார்! தேவைப்படாத இடத்தில் உதவிக்குப் போவதும் மரியாதை இல்லை!

நாம் மாநில சுயாட்சி கோரிக் கொண்டிருக்கிறோம்; மாநில சுயாட்சியில் நம்பிக்கையுடைய யாரும் மத்திய அரசுக்கு மனுப் போடுவது மானமுடைய செயல் அல்ல!

காக்கையும் குயிலும் நிறத்தில் ஒன்றுபோல இருந்தாலும், வசந்த காலம் வந்தால், 'எது காக்கை -- எது குயில்' என்பது தெரிந்துவிடும்! இது வசந்த காலம்!

இத்தனை நாள் மாநில சுயாட்சி கேட்டவர்கள்கூட இப்போது மாறுகிறார்கள் என்றால என்ன பொருள்? பருவம வருகிறபோதுதான் உருவம் தெரியும்!

இந்த மாநில அரசு தவறு செய்கிறது எனறால், நான நேரடியாகவே போராடுவேன்,

மூச்சு விட்டால் மத்திய அரசுக்கு மனுப் போடுகிறாகள; எங்கும் இப்படி இல்லை; ஆனால் இந்த மாநிலத்தில போடுகிறார்கள்; ஏன் -- இந்த மாநிலததிலதான் மததிய ஆட்சிக்கு மாறுபட்ட ஆட்சி இருக்கிறது; 'இந்தக் கட்சி வேற்றுமை காரணமாக மத்திய அரசு தலையிடும்' என்று கருதுகிறார்கள்; 'மத்திய அரசு தலையிட்டு இந்த ஆட்சியை நீக்கும்' என்று நம்புகிறாகள்!

இந்த மாநிலத்தில் ஒரு கட்சியும் -- மற்ற மாநிலங்களில ஒரு கட்சியும் ஆளுகிறதென்றால, வழக்கமாக ஆகவேண்டும் -- வரலாறாக ஆகவேண்டும்; இதை எதிர்த்து அங்கே மனுப் போட்டால, மத்திய அரசு தலையிட்டு, கலைத்துவிடும் என்று நினைப்பதே அரசியல் சட்டத்திற்கு ஏற்பட்ட அவமானமாகும்!

தி. மு. க. ஆட்சி என்பதால்கூட அலல -- சிண்டிகேட் கட்சி ஆட்சியாக இருந்தால்கூட -- இப்படி எதிர்க்கட்சிககாரர்கள் மனுப் போட்டால், ஆதரித்திருக்கமாட்டேன்!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. [illegible] ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் [illegible] இங்கு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

5--11--72

சிவகாசி

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு மாரியம்மன் கோவில் திடலில்; தலைவர்: வ. சு. குருசாமி; பேசுவோர்: சி. தமிழரசி, எஸ். பி. மணியம், ஏ. துரைக் கண்ணன், வே. கருணாகரன், சி. பெ. குருசாமி, எஸ். ஏ. ரெசாக் எம்.சி., ச. ஆறுமுகம் எம்.சி., ஷாபி அபுதாலிப் எம்.சி., எஸ். இராமகிருஷ்ணன், எஸ். எம். பொன்னுசாமி, சி. பழனிச்சாமி, க. மாரியப்பன், எம் முருகேசன், எம்.எஸ். தங்கமணி, கா. பதார்.

ஆரணி வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம்

ஆரணி வட்ட தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டம், 5—11—72 பகல் 2 மணிக்கு ஆரணி ஆற்றங்கரையோரம் உள்ள ஆர். என். வீரபத்திரன் ரைஸ் மில்லில் நடைபெறும்; வட்ட உறுப்பினர்கள் தவருது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் மு. ந. இராமன் கேட்டுக்கொள்கிறார்.

உணவுத்துறை அமைச்சர்

ப. நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

நவ. 5 காலை 9.10 மணி: பட்டுக்கோட்டை—தமிழ்நாடு எண்ணெய் மற்றும் தொடர்பு பொருட்கள் கூட்டுறவுக் கழகத்தைப் பார்வையிடல்.

மருத்துவமனையில் கு. காமாட்சி எம்.எல்.ஏ.

திருவெறும்பூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. காமாட்சி உடல் நலக்குறைவால் திருச்சி அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரை, மாவட்ட தி.மு.க. செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம், நவல்பட்டு ஊராட்சித் தலைவா டி. கிருஷ்ணமூர்த்தி, திருவெறும்பூர் ஒன்றியத் தலைவர் முருகேசன், டி. வளவனூர் ஊராட்சித் தலைவா டி. எம். ஐம்புலிங்கம், டி. பழனிவேல், க. அறிவன், கு. இராமசாமி ஆகியோர் சென்று உடல்நலம் விசாரித்தனர்.

தலைமைக் கழக அறிவிப்பு

ஒழுங்கு நடவடிக்கை ரத்து

தலைமைக் கழகத்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் தோழர்கள் தங்கள் தங்கள் செயலுக்காக வருத்தம் தெரிவித்திருப்பதையொட்டியும் —நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள காலத்தில் கழகத்திற்குப் புறம்பாக நடந்துகொள்ளாத நிலையையொட்டியும் — மாவட்டச் செயலாளரின் பரிந்துரைப்படியும் — அவரவர் பேரில் எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை இன்று முதல் ரத்து செய்யப்படுகிறது என்பதுடன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நாளில கழகத்தில் அவரவர் வகித்துவந்த பொறுப்புக்களையே தொடர்ந்து மேற்கொண்டு பணியாற்றுவதற்கும் தலைமைக் கழகம் அனுமதியளிக்கிறது.

1. ஏ. கிருஷ்ணமூர்த்தி (வளவனூர் கிளைச் செயலாளர்)
2. எஸ். கோவிந்தசாமி (கண்டமானடி)

'அறிவகம்' சென்னை-13
2—11—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.